அம்பத்துார் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்

O.S.No. / RCOP: 40/2017

இந்த நீதிமன்றத்து உதவியாளர் திருமதி.V.நாகேஸ்வரி என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி/ பிரதிவாதி தரப்பின் சாட்சியின் வாக்குமூலம் 1873ம் ஆண்டின் 10வது சட்டத்தில் வகை முறைகளுக்கு உட்பட்டு 2025ம் ஆண்டு மார்ச் திங்கள் 06–ம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

ம.சா.1 06.03.2025

பெயர் சதாசிவம் தந்தை/ கணவர் பெயர்

தொழில் வயது

இனம் சமயம்

கிராமம் வட்டம்

1ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்க விசாரணை தொடர்ச்சி:–

8. ம.சா.ஆ 1 வாடகை ஒப்பந்தம் சாட்சியிடம காண்பிக்கப்பட்டு அது அவர் பாஸ்கர் (2ம் எதிர் மனுதாரர்) மற்றும் உமைத்ராஜ் என்பருடன் போடப்பட்ட ஒப்பந்தம் என்றால் சரிதான். ஒப்பந்தமானது 1ம் எதிர்மனுதார் நிறுவனத்துடன் போடப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கு தாக்கல் செய்த காலகட்டத்தில் எதிர்மனுதாரர்கள் என்னிடம வாடகை தாரர்களாக இருந்தார்கள் என்பதை காட்டுவதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. இம்மனுதாக்கல் செய்யப்பட்ட கால்கட்டத்தில் எதிர்மனுதார் என்னிடம் தான் வாடகை செலுத்தினார்கள் என்பதை நிருபிக்கும் ஆவணங்கள்

எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் சொல்வதுமாதிரி எந்த ஆவணமும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல.

9. ம.சா.ஆ 1 ஆவணத்தின் சொத்துபட்டியலில் 3300 சதுரஅடி என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது மனுவில் 2900 சதுரஅடி என்று குறிப்பிட்டு சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். 25.03.1997 அன்று நான் உமைத்ராஜ்க்கு மனுசொத்தை விற்பதற்கு ஒரு கிரையஒப்பந்தம் எழுதிகொடுத்தேனா என்றால் இல்லை சூரிட்டி ஆவணம் எழுதினேன். மேற்படி ஒப்பந்ததின் அடிப்படையில் உமைத்ராஜ் எனக்கு ரூபாய் 5 லட்சம் முன்பணம் கொடுத்தார் என்று சொன்னால் சரியல்ல. அந்த ஒப்பந்ததைநிறைவேற்ற வேண்டி அசல் வழக்கு எண் 90/2004 என்ற வழக்கை உமைத்ராஜ் என்மீது தாக்கல் செய்தார் என்று சொன்னால் சரிதான். அந்த வழக்கின் தீர்பின் சான்றிட்ட நகலை நான் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேன்.

10. சாட்சியிடம் அவர் தாக்கல் செய்யத ஆவணங்கள் காண்பிக்கப்பட்டது பின்னர் சாட்சி அசல் வழக்கு எண் 90/2004 தீர்ப்பு தாக்கல செய்யப்படவில்லை என்று ஒப்புக்கொண்டார். மேற்படி வழக்கின் ரூபாய் 5 லட்சத்தை உமைத்ராஜ்க்கு 6 சதவீத வட்டியுடன் 25.03.1997 ல் இருந்து கொடுக்கவேண்டும என்று தீர்ப்பிடப்பட்டுள்ளது என்றால சரிதான். கற்றறிந்த 1 ம் எதிர்மனுதாரர் வாக்கறிஞர் ஏற்கனவே மேல்முறையீடு பற்றி கேட்கபட்ட கேள்விகளில் வழக்கு எண் 35 என்று தவறுதலாக குறிப்பிடப்பட்டுள்ளது, வழக்கின் மேல்முறையீட்டு எண் 95 /2013 என்று கூறினார், சாட்சியும அதை ஒப்புக்கொண்டார்.

11. மேற்படி அசல் வழக்கு எண் 90/2004 தீர்ப்பின் உமைத்ராஜ

எனக்குதனிப்பட்ட முறையில் வேறு எதாவது பணம் கொடுக்கப்படவேண்டும் என்றால் அதனை உரிய முறையில் பெற்றுக்கொள்ள எனக்கு அனுமதி அளிக்கப்பட்டது என்று சொன்னால சரிதான். அதன் அடிப்படையில் வாடகை பாக்கி வாடகை பாக்கியை பெறுவதற்காக நான் மாண்புமிகு சார்பு நீதிமன்றதம பூந்தமல்லியில் அசல வழக்கு ஒன்று தாக்கல் செய்து அது தற்போது மாற்றலாகி மாண்பு மிகுசார்புநீதிமன்றம் அம்த்துாரில் அசல் வழக்கு எண் 933 /2023 ஆக தற்போது நிலுவையில் உள்ளது என்று சொன்னால் சரிதான். சாட்சியிடம் மேற்படி வழக்கின் தாவா நகல் காண்பிக்கப்பட்டு அது அவர் தாக்கல் செய்தது என்று ஒப்புக்கொண்டத்தின் அடிப்படையில் அந்த ஆவணம் **எ.ம.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இந்த வழக்கிலும் அந்த வழக்கிலும் உள்ள பட்டியல் சொத்து ஒன்று தான் என்று சொன்னால் சரியல்ல.

12. நீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில் கிரையஒப்பந்திற்கான ரூபாய் 5 லட்சத்திதை வட்டியுடன் நான் உமைத்ராஜ்க்கு கொடுத்துவிட்டேன். சாட்சி தானகவே முன்வந்து நான் 5 லட்சத்திதை 1997 ல்லே திருப்பிக்கொடுத்துவிட்டேன் அதனால் வட்டி திருப்பிக் கொடுக்க வேண்டியது இல்லை. நீதிமன்ற தீர்ப்பின் படி கொடுக்கவேண்டிய பணத்தை வட்டியுடன் நான் திருப்பிசெலுத்தவில்லை என்று சொன்னால் சரியல்ல.

13. மேற்படி அசல் வழக்கு பற்றியும் மேல்முறையீடு பற்றியும்நான் இந்த வழக்கில குறிப்பிட்டு சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் தாக்கல செய்த ம.சா.ஆ.1 மனுவானது ஆர்சிஒபி 38 /2002 ன் தாக்கல செய்த ஆவணதின் சான்றிட்ட நகல் என்றால் சரிதான். மேற்படி ஆர்சிஒபி வழக்கும் தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது என்றுசொன்னால சரிதான்.

இந்த மனுதாக்கல செய்தபோது எனக்கும் எதிர்மனுதாருக்கும் கட்டிடஉரிமையாளர் வாடகை தாரர் என்ற உறவு இல்லை என்று சொன்னால் சரியல்ல. அசல் வழக்கு எண் 90/2004 ல் தீர்ப்பின் படி நான் உமைத்ராஜ்க்கு ரூபாய் 13 லட்சத்தி 35 ஆயிரம் கொடுக்கவேண்டும் என்றுசொன்னால் சரியல்ல. நான் தாக்கல செய்த அசல் வழக்குஎண் 933/2023 உமைத்ராஜ்க்கு நான் கொடுக்கவேண்டிய 19 லட்சதட்தை திருப்பி தரவேண்டும் என்று எதிரிடைபரிகாரம் கோரியள்ளார் எ்னறு சொன்னால் சரியல்ல.

14. நீதிமன்றம் தீர்பின் படி பணம் கொடுக்காமல் இருக்க நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

இத்துடன் குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்படுகிறது, மறு விசாரணை இல்லை.